Judicial Form No.53

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, POCHAMPALLI.

Case No. : OS.No.100/2023

Witness for Prosecution : PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : ரவி | Taluk | : |
| Father's / Husband Name | : சின்னபையன் | Calling | : |
| Village | : குட்டூர் | Age | : 51 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 27.04.2026 administered by **THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, POCHAMPALLI**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

1) பெருமாள் மற்றும் சேட்டு (எ) சேட்டம்மாள் எனது பெரியப்பா மற்றும் பெரியம்மா என்றால் சரிதான். பெருமாள் மற்றும் சேட்டு (எ) சேட்டம்மாள் என்பவரின் வாரிசுகள் யாரும் இல்லை என்பதை காட்டுவதற்கான சாட்சியோ, சான்றாவணமோ இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது பெரியப்பா பெருமாள் என்பவரின் உடன் பிறந்த சகோதர, சகோதரிகள் பல வருடங்களுக்கு முன்பே இறந்துவிட்டதாக சொல்லியுள்ள பொழுது அவர்களின் இறப்பிற்கான ஆவணங்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல, எனது பெரியப்பாவிற்கு எனது அப்பா மட்டுமே சகோதரர், அவரது இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வதுபோல் எனது அப்பாவின் இறப்பு சான்றிதழ் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

2) என்னுடைய வாதுரையிலோ அல்லது முதல் விசாரணை வாக்குமூலத்திலோ எனது பெரியப்பா பெருமாள் என்பவருக்கு உடன் பிறந்த சகோதரர்கள் எத்தனை பேர், சகோதரிகள் எத்தனை பேர் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனதுஅப்பா மட்டுமே எனது பெரியப்பா பெருமாளின் சகோதரர் என்றால் எனது வாதுரையிலோ அல்லது முதல் விசாரணை வாக்குமூலத்திலோ எனது அப்பாவின் பெயரை மட்டுமே குறிப்பிட்டு தாக்கல் செய்து இருப்பேன் என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

3) என்னுடைய வாதுரையில் என் தாத்தா உடைய வம்சாவழியினை குறிப்பிட்டு சொல்வதற்குரிய வம்சாவழிப்பட்டியல் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய பெரியப்பா மற்றும் பெரியம்மாவிற்கு நேரடியான வாரிசுகள் இல்லை என்பதற்கும், அவர்களுக்கு தத்தெடுப்பு வாயிலாக எந்த விதமான வாரிசுகள் இல்லை என்பதற்கும் தனிநபர் சாட்சிகள் யாரும் இவ்வழக்கில் விசாரிக்கப்படவில்லை என்றால் சரிதான். எனது பெரியப்பா பெருமாள் மற்றும் எனது பெரியம்மா சேட்டு (எ) சேட்டம்மாள் ஆகியோர்க்கு 3 ம் நிலை வாரிசுகளாக வாதிகளை அறிவிக்ககோரி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கில் அதற்கு ஆதரவாக ஆவணங்கள் மற்றும் சாட்சிகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும், வாரிசு சான்றிதழ் விண்ணப்பித்த இடத்தில் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும், அதனால் இவ்வழக்கில் உள்ள பரிகாரங்கள் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. இந்த தாவா தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

"Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct."

Sd/- M.Suriyakumar, B.A., LL.B.,
District Munsif Cum Judicial
Magistrate, Pochampalli